# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,931—1970 නොවැම්බර් 5 වැනි බ්‍රහස්පතින්දා—1970.11.5

14,931 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 5 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்யக்கூடியதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. . | 1001 | ஆயவிற்பனைவும், குத்தகை விற்பனைவும .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் ... .. | 1010 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. . | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானுவித அறிவித்தல்கள் .. .. . | — |


### பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அச்சகத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

---

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையான இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயணக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, கரைப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(1) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைச் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதாவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கி விடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கி விடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரைவிலக்கணம்.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல : எ. 89/X2295/70

## கல்வி அமைச்சு

### மகாவித்தியாலயங்களிலுள்ள I ஆந் தர விசேட பதவிகள்

அரசினர் சிங்கள/தமிழ், முஸ்லீம் மகாவித்தியாலயங்களிலுள்ள I ஆந் தர விசேட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 19.11.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 26.11.1970.

மு. கு.—(i) வெளிநாட்டு விண்ணப்பதாரிகள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(ii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாக விருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிரும்புபவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) சிங்கள/தமிழ் அல்லது முஸ்லீம் மகாவித்தியாலயங்களிலுள்ள விசேட பதவிகளில் எதற்கு விண்ணப்பம் செய்யப்படுகிறதென விண்ணப்பப் படிவத்தின் 15 ஆம் கூட்டில் குறிப்பிடுக.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(1) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(2) தெரிவு செய்யப்படுபவர்கள் புதிய பதவியில் ஒரு வருடகாலத்துக்கு பதில் கடமைபுரிய வேண்டும். பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும் அத்தரத்துக்கு பதவி உயர்ச்சி அளிக்கப்படும் திகதியிலிருந்து, நிதிப் பிரமாணங்களுக்கமைய, உரிய சம்பள விகிதத்தில் அவர்கள் வைக்கப்படுவார்கள்.

(3) விண்ணப்பதாரிகள் உடல்நலம் உடையவராகவும் சிறந்த நல்லொழுக்கம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 7,800—9 × 360—11,040—என்ற திரட்டிய, விவாகச் சகாயப்படி விதிக்கப்பட்டுள்ள வீதங்களுக்கமைய வழங்கப்படும்.

4. தகைமைகள்.—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்பவராக திருப்திகரமான சான்று காட்டவேண்டும்:—

(i) 19.11.1970 ஆந் திகதியன்று விண்ணப்பதாரிகள் 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கெனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது);

(ii) ஆசிரியராகக் குறைந்த பட்சம் 5 வருட சேவைபுரிந்த பயிற்றப் பட்ட பட்டதாரியாக அல்லது சமமான தகைமைகள் உடைய ஒருவராக இருக்க வேண்டும்;

அல்லது

(iii) பட்டம் பெற்றபின் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக (1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு) சிறப்புப் பட்டதாரியாக அல்லது பட்டம் பெற்றபின் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற, சமமான தகைமைகள் உடைய ஒருவராக இருக்க வேண்டும்;

அல்லது

(iv) பட்டம் பெற்றபின் 7 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது பட்டம் பெற்றபின் 7 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற, சமமான தகைமைகள் உடைய ஒருவராக இருக்க வேண்டும் ;

அல்லது

(v) குறைந்தபட்சம் 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற, சமமான தகைமைகள் உடைய ஒருவராக இருக்க வேண்டும் ;

அல்லது

(vi) II ஆந் தர விசேட பதவி வகித்தவராக குறைந்தபட்சம் 5 வருட சேவை புரிந்த II ஆந் தர விசேட பதவி வகிப்பவராக இருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) விண்ணப்பதாரிகள் சிங்களத்தில்/தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் சமமான அல்லது உயர்ந்த தகைமைகளை ஏற்கெனவே பெற்றிராவிடின் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தி அடையவேண்டும். சிங்களத்தில/தமிழில் தகைமை பெறுவதற்கு 3 வருடங்களுக்குக் கூடுதலாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சி பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(2) பயிற்றப்பட்ட பட்டதாரியாக/பட்டதாரியாக/உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியராக/பயிற்றப்பட்ட சிங்கள அல்லது தமிழ் ஆசிரியராக புரிந்துள்ள சேவைக்காலத்தைக் கணிக்கும் பொழுது ஒருவர் பெற்றுள்ள படிப்பு லீவு அல்லது சம்பளமற்ற லீவு சேர்க்கப்படாது.

(3) தெரிவு செய்யப்படுபவர்கள் சாதாரணமாக மகாவித்தியாலயங்களில் பிரதி அதிபர்களாக அல்லது பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள். விசேட பதவி வகிப்பவர்கள் பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்படுமிடத்து பொதுவாகப் பின்வரும் பாடத்துறைகளையும் கவனிக்க வேண்டும்.

(1) மொழியும் சமயப் படிப்புகளும்.

(2) சமூகப் படிப்பு (சரித்திரம், புவியியல், ஆட்சியியல், பொருளியல், குடியியல் ஆகியவை).

(3) கணிதமும் விஞ்ஞானமும்.

(4) தொழில்நுட்ப, வணிக, இரசாயனப் படிப்புகள்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச்சாட்சிப் பத்திரம் (மு.கு. : ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க அதிகாரசபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைச்சளத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசி திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணயக்காரு,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு I,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 30 ந் உ.

11–145/1—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

இல. A. 90/X. 2296/70

## கல்வி அமைச்சு

### மகாவித்தியாலயங்களிலுள்ள I ஆந் தர அதிபர் பதவிகள்

அரசினர் சிங்கள, தமிழ், முஸ்லீம் மகா வித்தியாலயங்களிலுள்ள I ஆந் தர அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் படிவங்களில் எழுதப் பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500 கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 19.11.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 26.11.1970.

குறிப்புகள்.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் 15 ஆம் கூட்டில் கேட்கப்பட்டுள்ள விபரங்களைத் தவிர பின்வருவனவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும் :—

(அ) 1 ஆந் தர சிங்கள/தமிழ் அல்லது முஸ்லீம் மகா வித்தியாலயம் தொடர்பான 1 ஆந் தர அதிபர் பதவிக்காக விண்ணப்பம் உரியது.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியில் குறிபபிடப்பட்டுள்ள தகைமைகளுள் எவ்வுபபந்திக்கமைய விண்ணப்பித்தற்கு உரித்துடையீர்.

(iv) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள், விரும்பினல் விணணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(v) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாயிருக்கின்ருர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிககப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். ஆண் நியமதாரிகள் விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படுபவர்கள் புதிய பதவியில் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமைபுரிய வேண்டும். பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும் அத் தரத்துக்கு பதவி உயர்ச்சி அளிக்கப்படும் திகதியிலிருந்து, நிதிப் பிரமாணங்களுக்கமைய, உரிய சம்பள விகிதத்தில் அவர்கள் வைக்கப்படுவார்கள்.

**3.சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 8,160—8 × 360—2 × 480. ரூபா 12,000 ஒன்று திரட்டிய விவாகச் சகாயப்படி விதிக்கப்பட்டுள்ள வீதங்களுக்கமைய வழங்கப்படும்.

**4. தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்பவராக திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) (i) 19.11.1970 அன்று 30 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும்.

(ii) II ஆந் தர அதிபராக 5 வருட சேவை புரிந்த II ஆந் தர அதிபராக இருக்கவேண்டும் ;

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டம்பெற்ற I ஆந் தர வித்தியாதரிசியாக அல்லது சமமான தகைமைகளுடன் வித்தியாதரிசியாக அல்லது ஆசிரியராக அல்லது அல்லது இவ்விரு பதவிகளிலும் 10 வருட சேவை புரிந்த ஒருவராக இருக்கவேண்டும் ; அல்லது

(iv) பயிற்றப்பட்ட பட்டதாரியாக 5 வருட சேவை உட்பட ஆசிரியராக 12 வருட சேவைபுரிந்த (அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற) பயிற்றப்பட்ட பட்டதாரியாக அல்லது சமமான தகைமைகள் பெற்ற ஒருவராக இருக்க வேண்டும் ;அல்லது

(v) பட்டம் பெற்றபின் 5 வருட சேவை உட்பட ஆசிரியராக 20 வருட சேவை புரிந்த, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக அல்லது சமமான தகைமைகள் பெற்ற ஒருவராக இருக்கவேண்டும் ; அல்லது

(vi) I ஆந் தர விசேட பதவி வகித்தவராக 5 வருட சேவை புரிந்த 1 ஆந் தர விசேட பதவி வகிப்பவராக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் உடல்நலன் உடையவராகவும் சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும் இருக்கவேண்டும்.

**குறிப்புகள்.**—(1) மேற்குறித்த தகைமைகள் மிகக் குறைந்த தேவைகளாகும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களின் பட்டப் பரீட்சைகளில் உயர்ந்த தரங்களை அடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கற்பித்தற்குப் பொருத்தமுடைய உயர்தொழில் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களுக்கும் பாடசாலை வெளிவேலைகளில் அக்கறை காட்டியுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

(2) விண்ணப்பதாரிகள் சிறந்த சிங்கள/தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள், ஏற்கெனவே சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிராவிடின் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் சித்தியெய்த வேண்டும். சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்துவதற்கு 3 வருடங்களுக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சி பிற்போட்ட காலமாகக் கருதப்படும்.

(3) ஆசிரியராக/விசேட பதவி வகிப்பவராக/அதிபராக/பரிசோதகராக பிரிந்த சேவைக்காலத்தைக் கணித்தற் பொருட்டு, எடுக்கப்பட்ட படிப்பு லீவு அல்லது சம்பள மற்ற லீவுக்காலம், சேர்க்கப்படலாகாது.

(4) இந்நோக்கத்தின் பொருட்டு பயிற்றப்பட்ட பட்டதாரியானவர்—

(i) பட்டம் பெற்றபின், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமா பெற்றவராவார் ;

அல்லது

(ii) பயிற்றப்பட்ட காலத்தில் விசேட பயிற்சிபெற்ற ஒரு பாடத்தை எடுத்து பட்டப் பரீட்சைக்குத் தோற்றிய ஓர் உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியராவார்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் (**மு. கு.** ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும், எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1.
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 30 ந் உ.

11–145/2—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## அரசகரும மொழித் திணைக்களம்

### சிங்களப் போதனாசிரியர் பதவி

அரசகரும மொழித் திணைக்களத்திலுள்ள சிங்களப் போதனாசிரியர் பதவிக்கு தகுதியுடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி எழுதி 1970 நவம்பர் மாதம் 19 ஆந் தேதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. வேதனம்.—இப்பதவிக்குரிய ஆண்டு வேதன அளவுத் திட்டம் :-

(அ) சாதாரணப் பட்டதாரிகளுக்கு.—ஓராண்டுக்கு ரூபா 5,160 ல் ஆரம்பமாகி ரூபா 144—10 உம் கொண்ட ஆண்டு ஏற்றங்களுடன் ரூபா 7,800 வரையிலான திரட்டப்பட்ட வேதனமாகும் ஆண்டு வேதனம் ரூபா 6,600 வரை ஏறுவதற்கு முன் வினைத்திறன் தடையுண்டு. (1.10.69 ஆந் தேதிக்கு முன் நிலவிய வேதன அளவுத்திட்டம் : ரூ.2,700—120 × 10 உம் 180 × 7—ரூபா 5,160

(ஆ) சிறப்புப் பட்டதாரிகளுக்கு.—ஓராண்டுக்கு ரூபா 5,736 ல் ஆரம்பமாகி ரூபா 144—11 உம் ரூபா 180—6 உம் கொண்ட ஆண்டு ஏற்றங்களுடன் ரூபா 8,400 வரையிலான திரட்டப்பட்ட வேதனமாகும். ஆண்டு வேதனம் ரூபா 6,600/- வரை ஏறுவதற்கு முன் வினைத்திறன் தடையுண்டு. (1.10.69 ஆந் தேதிக்கு முன் நிலவிய வேதன அளவுத்திட்டம் : ரூபா 3,180—120 × 10 உம் 180 × 7—ரூபா 5,640)

3. நியமன நியதிகள் :

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய வேதனத்திற்குரியது. விதவை, அனாதைக் குழந்தைகள் ஓய்வூதிய வேதனத்திற்கு உதவு தொகையைக் கட்டல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல்வேண்டும். வடமாகாணத்தில் அல்லது கீழ் மாகாணத்தில் சேவைசெய்யத் தயார் என்னும் நிபந்தனையின்பேரில் அவர் தெரிவு செய்யப்படுவர்.

(iii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் நியமனம் பெற்று மூன்றாண்டு காலத்துள் க. பொ. த. (சாதாரண)ப் பரீட்சையிற் தமிழில் சித்தி அடைதல் வேண்டும்.

(iv) அவரின் முக்கிய கடமைகள் வருமாறு : அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சிங்களத்தைப் போதிக்க வேண்டிய பாடத்திட்டங்களைத் தயாரித்தல், வகுப்புக்களை ஒழுங்கு செய்தல், சிங்களத்தைப் பயிற்றுவித்தல், அரசாங்க மொழித் திணைக்களத்தால் நியமிக்கப்படும் வேறு கடமைகளில் துணைபுரிதல் என்பனவாகும்.

4. **வேண்டப்படும் தகைமைகள் :** விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையார் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிங்களம், பாளி அல்லது சமஸ்கிருதத்தை பட்டப்படிப்பில் பாடமாகக் கொண்டு நனகு மதிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றவராகவும் விண்ணப்பம் செய்யும் போது சிங்களத்தில் நல்ல அறிவுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்குட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயது மேலெல்லை பொருத்தமுடையதாகாது.

(இ) சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் உடநலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

**கவனிக்குக :** விண்ணப்பம் செய்யும்போது க. பொ. த. (சாதாரண)ப் பரீட்சையில் அல்லது அதற்கு மேலான பரீட்சையில் தமிழ் மொழியில் சித்தி எய்தியும், ஆசிரியராகத் தொழிலில் அனுபவம் இருந்தால் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றில் படிகளை (மூல இதழ்களையல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் ; அல்லது (பிறப்பு பதியப்படாத விண்ணப்பகாரருக்கு) பதிவாளர் தலைமை அதிபதி வயது பற்றி வழங்கிய சிறப்புச் சான்றிதழ். (சமய நீடலைச் சான்றிதழ் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது).

(ஆ) உயர் கல்வித்தகைமைகள், உயர்தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரரின் தகைமைகள், குணம் இப்பதவி வகிப்பதற்குரிய தகுதி ஆதியன பற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர் இத் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்).

குறிப்பு : சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் படிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவ்விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தேதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரிடம் கிடைத்திருப்பதுடன் அத்தலைவர், கணக்கதிற்குச் செல்லுபடியான காரணங்காட்டி, அதனை ஏற்றுக் கொள்ளுமாறு சிபாரிசும் செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கே விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் ; இந்த திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரின் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க வர்த்தமானியில் I ஆம் பாகத்தின் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

9. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுததேதி கழிந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறாத விண்ணப்பக்காரர் உடனே அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டைப் பின்பற்றத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்குமாறு கேட்கும் உரிமையை இழந்தவராவர்.

பீற்றர். பி. அபயசேகர,
அரசாங்க மொழி அலுவல் ஆணையாளர்.

அரசாங்க மொழித் திணைக்களம்,
22, நீட் வழி,
த. பெ. இல. 598,
கொழும்பு-7
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 25 ந் உ.

அரசாங்க மொழித் திணைக்களம்

1. விண்ணப்பக்காரர் முழுப்பெயர் (திரு/திருமதி/செல்வி) :————.

(பெரிய தனி எழுத்தில்) :————.

(அ) குடும்பப் பெயர் :————.

(ஆ) பிற பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) 1970 நவம்பர் 19 ஆந் தேதியன்று சரியான வயது :————.
ஆண்டு : மாதம் : நாள் :

(ஆ) பிறந்த தேதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின் படி அல்லது வயது பற்றிய சிறப்புச் சான்றிதழின் படி இணைக்கப் படுதல் வேண்டும்) :

4. தேசீய இனமும், அது எவ்வாறு பெறப்பட்டது, என்பதும் :————.

5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப்பெயர் :————.

(ஆ) தந்தையார் பிறந்த தேதியும் இடமும் :————.

(இ) அவருடைய தேசீய இனம் :————.

6. விண்ணப்பகாரர் பொதுக் கல்வி கற்ற பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்களும் அவற்றின் சேர்ந்த தேதியும், அவற்றை விட்டு நீங்கிய தேதியும் :————.

7. (அ) கல்விக்கழகத் தகைமைகளும் உயர்தொழிற் தகைமைகளும் (தகைமைகள் பெற்ற தேதியும் வகுப்புப் பெற்றிருப்பின் எந்த வகுப்பு என்பதும் ஆதாரமாகச் சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

(ஆ) சிங்களம், பாளி, வடமொழி ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் :————.

(1) சிங்களப் புலமை :————.

(2) தமிழ்ப் புலமை :————.

8. ஆசிரியர்த் தொழிலில் அனுபவம் பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :————.

9. (அ) பாடசாலை அல்லது கல்லூரியை விட்ட பின் செய்த தொழில் தொழிலிற் சேர்ந்த தேதியும், அதனை விட்ட தேதியும் பெற்ற வேதனமும் :————.

(ஆ) அரசாங்க சேவையிலிருப்பின் இப்பொழுதுள்ள நிலையும் ஆண்டு வேதனமும் :————.

10. விசேட உரிமைக் கோரிக்கைகள், தமைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பெற்றிருப்பின் அவை பற்றி விபரங்கள் :————.

11. சொந்த வாழ்க்கையில் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமான நடுவர் மூவரின் பெயர்கள். (இவர்களுடைய நிலையும் முகவரியும் குறிக்கப்படல் வேண்டும், இவர்கள் உங்கள் உறவினர் அல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்) :————.

1.————.
2.————.
3.————.

12. இணைக்கப்படும் நற்சான்றிதழ்கள் வழங்கிய (உறவினர் அல்லாத) வர்களின் பெயர்களும் நிலைமைகளும் (அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

13. நீர் பணமுட்டின்றியிருக்கின்றீரா? பணமுட்டிருப்பின் எவ்வளவு வரையில் இருக்கும் (கணக்குகளைத் தருக):————.

14. வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலுள்ள விவரங்களில் எதுவாயினும் பொய்யாகவோ, பிழையாகவோ விருப்பது கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்படுவது தெரிவுக்கு முன்னராயின் தெரிவுக்குரிய மூன் தகைமைகளை இழப்பேன் என்பதையும் நியமனம் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப் பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி

11-44—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## கொழும்பு மாவட்டத்தில் ஹங்வெல்ல பிரிவிற்கு பிறப்பு, இறப்பு, கேவகம் கோறளை பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

ஹங்வெல்ல பிறப்பு இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவுத்திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராமநீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும் பொலிஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 4 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மாவட்டப்பதிவாளர்.

கொழும்பு,
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
1970 ம் ஆண்டு ஐப்பசி மீ 27 ந் உ.

11-43—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில் போரைதீவுப் பிரிவிற்கு (களுதாவளை பிரதேசத்துக்கு) விவாக (பொது) பதிவுக்காரர் பதவி

மண்முனை தென் எருவில் போரைதீவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பமுடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்கள், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு திசம்பர் மாதம் நாலாந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தா. பாலசந்திரன்,
பெரும்பகுதிப் பதிவுக்காரர் (மேலதிக).

மட்டக்களப்பு,
பெரும்பகுதிப் பதிவுக்காரர் அலுவலகம்,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 24 ந் உ.

11-35—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## ஆயுள்வேத திணைக்களம்

### பரிசாகரர் பதவி (அற்றெண்டன்) (உடலமைப்பியற் பிரிவு)

ஆயுள்வேத திணைக்களத்தில் பரிசாகரர் பதவிக்கு (உடலமைப்பியற் பிரிவு) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் முறையே செய்யப் பெற்று ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், கொட்டா வீதி, கொழும்பு 8 என்ற எனது அலுவலக முகவரியில் 1970 நொவெம்பர் 20 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

1. **சம்பளஅளவுத் திட்டம்.**—வருடமொன்றுக்கு திரட்டிய சம்பளமாக 2,208—9 × 54—2,694 ரூபா.

2. (அ) **கல்வித் தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஏழாவது தரத்தி லாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (திணைக்கள விண்ணப்பதாரர் களின் விடயத்தில் திணைக்களத் தலைவரின் தற்றுணிவின் பிரகாரம் கல்வித் தகைமைகள் தளர்த்தப்படும்).

(ஆ) உயிரற்ற உடல்களைப் பாதுகாத்து வைப்பதில் அனுபவமிருத்தல் வேண்டும். (மருத்துவ ஆய்கூடத்தில் வேலை செய்து பெற்ற அனுபவம் சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்).

(இ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையும் தேகாரோக்கியமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) 1970 நொவெம்பர் 20 ஆந் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவர் களாகவும் 25 வயதுக்கு மேற்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும். (ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்குக் கூடிய வயதெல்லை பொருந்தாது).

3. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் விதவைகள் அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு உதவுத் தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்.

4. விண்ணப்பதாரர்கள் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) தங்களது விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்கென வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிக உயர்ந்த கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள்.

இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி II ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப் படுகின்றது.

விமல் நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

### விண்ணப்ப மாதிரிப் படிவம்

#### ஆயுள்வேத திணைக்களம்

#### பரிசாகரர் (அற்றெண்டன்) பதவி (உடலமைப்பியற் பிரிவு)

1. முழுப்பெயரும் :————.
(அ) முதற் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.

2. முகவரி :————.

3. பிறந்த இடமும் திகதியும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ந் திகதி வயது :————.
வருடங்கள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————.

4. இலங்கையரா என்பது ? :————.
அங்ஙனமாயின் வம்சாவழியினலா பதிவு காரணமாகவா :————.

5. உயர்ந்த கல்வித் தகைமைகள் :————.
(பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

6. தொழில் அனுபவம் :————.

7. இற்றைவரை வகித்த அரசாங்கப் பதவி ஏதுவுமிருப்பின் அதற்கு நியமிக்கப்பட்ட திகதியும் விட்டு விலகும் காரணங்களும் :————.

8. குறிப்புகள் :————.

இதன் கண் என்னுல் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மை யானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். அவை பொய்யானவை அல்லது பிழையானவை என தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்துத் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படு மிடத்து நட்டாடு எதுவுமின்றி வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
திகதி :————. விண்ணப்பதாரியின் ஒப்பம்.

11–39—5.11.70 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## இலங்கை அரச கடற்படைத் தொண்டர் சேவையில் மாலுமிகள் பதவிகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை அரச கடற்படைத் தொண்டர் சேவையில் மாலுமிகள் பதவி களுக்கு வெற்றிடங்கள் உள.

2. விண்ணப்பகாரர் கீழ்க்காணும் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி 18 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) கடற்படைத் தளபதியினுல் விதிக்கப்பட்ட வைத்தியப் பரிசோதனை யில் திருப்தியளிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) குறைந்தது எட்டாம் வகுப்புச் சோதனையிலோ அதற்குச் சமமான சோதனையிலோ சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(1) மேற்படி 2 (ஆ) பந்தியில் குறிப்பிட்ட வயதெல்லைக் கட்டுப் பாட்டைக் கடற்படைத் தளபதி தன் தற்றுணிபின்படி சில வேளைகளில் மாற்றவோ அல்லது நீக்கவோ செய்ய லாம்.

(2) விண்ணப்பகாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும், விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் இணங்கி நடக்கத் தயாராக இருத்தல் வேண்டும். விசேடம் பெற்ற வருக்கு அல்லது தொழில் நுட்பத் துறையில் திறமைகள் உடையவருக்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

3. சாதாரண காலங்களில் கடற்படைத் தொண்டர் மாலுமி ஒருவர் கிழமை அணிவகுப்புப் பயிற்சிகளுக்கும், கிழமைக் கடைசிப் பாசறை களுக்கும், 14 நாள் வருடாந்தப் பாசறை, கடற்படைத் தளபதியினுல் அங்கீகரிக்கப்படும் மற்றைய பயிற்சிக் கடமைக்கும் தோற்றும்படி வேண் டப்படுவர்.

4. கடற்படைத் தொண்டர் சேவைப் பிரமாணங்களுக்கமைய, கடற் படைத் தொண்டர் சேவையினருக்கு முக்கியமாகக் கைச்செலவுக்கெனச் சில படிகள் வழங்கப்படும்.

கடற்படைத் தொண்டர் தலைமை நிலையம், கொழும்பு 13 க்கு 30 மைல் சுற்றளவிற்கு வெளியில் வசிக்கும் விண்ணப்பதாரர்கள் அணி வகுப்பு, பாசறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அல்லது கடமை களுக்குச் சமுகமளிப்பதற்கான பிரயாணச் செலவுகளை மீளக் கொடுத்தல், பிரமாணங்களுக்கமைய, ஆகக் கூடுதலாக 30 மைல்களுக்குட்பட்ட தூரத்திற்கு வரையறுக்கப்பட்டதாகவே இருக்குமென அறிவுறுத்தப் படுகிறது.

5. பொதுச் சேவை நிபந்தனைகள் கடற்படைத் தொண்டர் படையின் பிரமாணங்களுக்கும், இலங்கை அரச கடற்படை அதிகாரச் சட்டத்திற்கும் உட்பட்டதாகவே இருக்கும். இலங்கைச் சட்டவாக்கத்தின் மீளவாய்ந்த பதிப்பின் 358 ஆம் அதிகாரக் கடற்படைச் சட்டத்தின் 7 ஆம், 16 ஆம் பிரிவுகளுக்கமைய ஒரு தொண்டர் முழு நேரச் சேவைக்குத் திரட்டப் படுவர். முழுநேர சேவைக்குத் திரட்டப்பட்ட தொண்டர் உறுப்பினர் ஒருவருக்கு இலங்கை அரச கடற்படை நிரந்தர சேவையிலிருக்கும் மாலுமிகளுக்கு உரித்தான படியும் செலவுப்படியும் கடற்படை வேதனச் சட்டக் கோவையின்படி வழங்கப்படும்.

6. இவ்வெற்றிடங்கள் கடற்படைத் தொண்டர் படையிற் தான் இருப்பதென்பதையும், நிலையான கடற்படையில் அல்ல என்பதையும் தெரிவு நிரந்தர ஊழியம் அளிக்கும் பதவியல்ல என்பதையும் விண்ணப்பகாரருக்குத் தெளிவாக அறிவிக்கப்படுகிறது.

7. விண்ணப்பகாரரை நன்ருகத் தெரிந்த பொறுப்பு வாய்ந்தவர் களிடமிருந்து கடந்த இருவருடங்களுக்குள் பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரு நற்சான்றிதழ்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

8. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையப் பெறப்படும்விண் ணப்பங்களின் தொகை கூடுதலாக இருக்கும் பட்சத்தில் ஓர் பூர்வாங்க மான தேர்வு நடைபெறும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்குப் பின்னர் தெரிவுச் சபையொன்றினுல் இறுதித் தெரிவு நடாத்தப்படும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு அப் பரீட்சைக்குரிய இடம், நேரம், நாள் ஆகியவை அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு எச்செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டா.

9. கீழே கொடுக்கப்பட்ட விண்ணப்பத்திற் தரப்பட்ட முறையில் விண்ணப்பங்களைத் தயார் செய்து, "ஏவுநர் அலுவலர், கடற்படைத் தொண்டர் படை, கொச்சிக்கடை, கொழும்பு 13" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்திலும் விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேற்புறத்திலும், "கடற்படைத் தொண்டர் படை மாலுமிகள் பதவிக்கு விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் கடற்படைத் தொண்டர் படைக்குக் கிடைக்கும் வண்ணம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

10. 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,884 இல் காணப்பட்ட இதே விதமான அறிவித்தலை ஒட்டி விண்ணப்பங்கள் அனுப்பியோரும், தொடக்க நேர்முகப் பரீட்சையும், வைத்தியப் பரீட்சையும் முடிவுற்ற விண்ணப்பகாரர்களும், மீண்டும் இவ்வறிவித்தலை ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. முன்னைய விண்ணப்பங்கள் யாவும் இதனால் நிராகரிக்கப்படுகின்றன.

டீ. வீ. ஹன்ரர்,
பதில் கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,

**இலங்கை அரச கடற்படைத் தொண்டர் சேவையிற் சேர்வதற்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) : ————.
2. தபால் முகவரி : ————.
3. அண்மையிலுள்ள தபால்/தந்திக் கந்தோர் : ————.
4. அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் : ————.
5. பிறந்த திகதி : ———— வயது : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைத்தல் வேண்டும்.)
6. நாட்டினம் : ————.
7. இராணுவ, கடற்படை, ஆகாயப்படைத் தொண்டர் அல்லது நிரந்தர சேவை (யுத்தகால சேவையுட்பட) ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால், அப்பிரிவு, திகதிகள் ஆகியவற்றுடன் பூரண விபரம் தருக : ————.
8. மேற்படி 7 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட சேவையிலிருந்து விலகும்போது இருந்த நடத்தை : ————.
(விலகற் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்)
9. சித்தியடைந்த உயர்தரப் பரீட்சைப் பாடங்களும் திகதிகளும்: ————.
(கல்வித் தகைமைச் சான்றிதழ்/பாடசாலைச் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்.)
10. தொடர்புடைய வேறு விபரங்கள் :————.
(விளையாட்டு அருஞ்செயல்கள், விசேட திறமைகள் ஆகியன)
11. தொழில் :—
(அ) பாடசாலை/கல்லூரியை விட்டு விலகிய பின் : ————.
(ஆ) தற்போதைய தொழில், விலாசம், வேலை செய்யும் இடம்: ————.
12. தற்போது வேலை கொடுத்திருப்பவரின் பெயரும் விலாசமும்: ————.
(கடற்படைத் தொண்டர் சேவையிற் சேருவதற்கு ஆட்சேபனை இல்லை என்று கூறும் கடிதம் ஒன்று வேலை கொடுத்தவரிடமிருந்து பெற்று இணைத்தல் வேண்டும்.)
13. உயரம் : ———— அடி ———— அங்குலம்.
14. நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்கள், பதவிகளும், முகவரிகளும் : ————.
15. விவாகமானவரா/தனித்தவரா ? : ————.
(விவாகமானவராயின், மனைவி குழந்தைகளின் விபரம்) :————
சீவிக்கின்றனரா ? பிறந்த திகதி : ————.
16. விண்ணப்பகாரர் அளிக்க வேண்டிய உறுதியுரை : ————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் சரியானவையும் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

————,

திகதி : ————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

**குறிப்பு.**—விண்ணப்பங்கள் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

10-48—5.11.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## கொழும்பு மாவட்டத்தில் ஒத்தர கிழக்குப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பு ; அழுத்குறுகோறளை வடக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

ஒத்தற கிழக்கு பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தவரையில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்சட் குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 20 ந உ.

11–12—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

### கல்வி அமைச்சு

**வாணிகப் பட்டதாரிகள்/வாணிகப் பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர்/அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போர் ஆகியோருக்கான உதவி ஆசிரியர் பதவிகள்**

*அரசினர் மத்திய மகா வித்தியாலயங்களில்/மகா வித்தியாலயங்களில் உள்ள வாணிகப் பட்டதாரிகள்/வாணிகப் பட்டப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர்/அங்கீகரிக்கப்பட்ட வாணிகத் தராதரப் பத்திரம் பெற்றிருப்போர் ஆகியோருக்கான உதவி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி 23.10.70 ஆந் திகதிய 14,929 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் 4(ஈ), ஆம், (உ) ஆம் பந்திகள் பின்வரும் உபபந்தியை சேர்த்துக் கொள்வதன் மூலம் திருத்தி அமைக்கப்படுகிறது.*

*"பொது நிர்வாகத்திலான பட்டப் பரீட்சை நெறியின் மூன்றும், நான்காம் வருடங்கள் கணக்கியலை விசேடமாகப் படித்த பொது நிர்வாகப் பட்டதாரியாக அல்லது அத்தகைய பட்டப் பரீட்சைப் பெறுபேறை எதிர்பார்த்திருப்பவராக இருக்க வேண்டும்"*

*மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 25.11.70 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*பி. உடகம,*
*நிரந்தரச் செயலாளர்.*

*கல்வி அமைச்சு,*
*மலாய் வீதி,*
*கொழும்பு 2.*
*30.10.70.*

*4-223—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931*

## இலங்கைச் சேமிப்பு வங்கி—வெற்றிடங்கள்

### எழுதுநர், பொது எழுதுநர் வகுப்பு

இலங்கைச் சேமிப்பு வங்கியின் பொது எழுதுநர் வகுப்பின் எழுதுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ந் திகதிக்கு முன்னதாகக் கீழே குறிப்பிடப்பட்டவருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

2. **வேதனம்**

ஆண்டொன்றுக்கு ரூ. 3,000—90 × 24—ரூ. 5,160 (எல்லாம் உட்பட).

3. **கல்வியும் மற்றும் தகைமைகள்**

(அ) விண்ணப்ப முடிவடையுந் திகதியன்று 17 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்டவராகவும்,

(ஆ) பாரம்பரியத்தால் அல்லது பதிவால் இலங்கைப் பிரசையாகவும்,

(இ) க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது உயர்தகைமையுடன் பின்வரும் பாடங்களில் சித்தி எய்தியவராயுமிருத்தல் வேண்டும்.

(1) சிங்களம்/தமிழ்,

(2) கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக கணிதம் என்பனவுடன்,

(3) ஒரே தடவையில் வேறு நான்கு பாடங்களில் சித்தி எய்திருக்க வேண்டும். இவற்றுள் கணிதம், மொழி என்பன உட்பட ஐந்து பாடங்களில் சிறப்புச் சித்தி எய்தியவராயும் இருத்தல் வேண்டும்.

4. **வேலை ஒப்புக்கொள் நியதிகள்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் இலங்கைச் சேமிப்புக்கட்டளைச் சட்ட விதிகளின் கீழ் ஓய்வூதியத்தன்மையுடையதுமாகும்,

(ii) நியமிப்புப் பெறுபவர் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்துக்கு உதவு தொகை செலுத்தவேண்டியது.

(iii) முகாமையாளரால் வேண்டப்பட்டவிடத்து நியமனம் பெறுபவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணைப்பணம் செலுத்த வேண்டும்.

(iv) நியமிப்புப் பெறுபவர்கள் இத்தீவின் எந்தப் பாகத்திலும் சேவை செய்வதற்கு ஏற்ற உடனலமுடையவராயிருத்தல் வேண்டும். இது தொடர்பாய் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரால் நடாத்தப்படும் மருத்துவச் சோதனையில் தேறுதல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்**

அரசாங்க சேவைக்குப் புதியவராயின் ஆட்சிமொழிக் கொள்கைகளுக்குக்கென வேண்டி—

(i) அவரின் தகுதிகாண்காலம்–பரீட்சார்த்தகாலம் 3 ஆண்டுகளாகும்

(ii) அவர் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய்சட்ட விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவார்.

(iii) அவர் தமது தகுதிகாண்காலம்/பரீட்சார்த்த காலத்தில் ஆட்சி. மொழியான—சிங்களத்தில் வேலைபார்க்கக்கூடிய அறிவைப் பெறவேண்டியது.

(iv) தகுதிகாண் காலம்/பரீட்சார்த்த காலம் முடியும் வேளையில் உறுதிப்படுத்துதல் மற்றவற்றிடையில் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை தரம் I, தரம் II, தரம் III முறையே நியமனம்பெற்ற திகதியிலிருந்து 1 ஆம், 2 ஆம், 3 ஆம் ஆண்டுகளில் சித்தி எய்தியதன் பேரில் (அல்லது I ஆம், II ஆம் தரங்களை முதலாம் இரண்டாம் ஆண்டுகளுக்கிடையிலும் பொருத்தமானபடி) உறுதிப்படுத்துதல் தங்கியிருக்கும்.

(குறிப்பிட்ட பரீட்சைகளில் குறிப்பிட்ட காலத்துள் சித்தி எய்தத் தவறின் சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தம் செய்யப்படும். குறிப்பிட்ட காலத்துக்கும் மேலான இன்னுமோர் ஆறுமாத காலத்துள் சித்தியடையாதவிடத்து சம்பள ஏற்ற இடைநிறுத்தம் முற்றாக நிறுத்தி வைக்கப்படும். இந்த நிறுத்தம் இப்பரீட்சையில் சித்தி எய்தும் காலம் வரை அல்லது (v) ஆம் பந்தியில் ஏற்பாடான காலம் வரை நீடிக்கும்.

(v) தகுதிகாண் காலம்/பரீட்சார்த்த காலம் முடியும் வேளையில் சிங்களத் தேர்ச்சி குறிப்பிட்ட அளவுக்கு எய்தாதவிடத்து நிருவாக ஒழுங்குவிதிகள் 120, 121 இன் ஏற்பாடுகள் பொருத்தமுடையதாகின்றது. சிங்கள மொழிமூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிபந்தனைகள் (iii), (iv), (v) பொருத்தமுடையனவாகா.

குறிப்பு : "புதிதாகச் சேர்ந்த" உத்தியோகத்தர்கள் என்னும் பதம் இச்சந்தர்ப்பத்தில் "பழைய உத்தியோகத்தர்கள் அல்லாத உத்தியோகத்தர்களை அதாவது வங்கிச்சேவையின் பதவிகளுக்கு 1956 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் நியமனம் பெற்றவர்களைக் குறிக்கும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், நிதி ஒழுங்குவிதிகள் நடைமுறைக் கைந்நூல் ஒழுங்குவிதிகள் அல்லது காலத்துக்குக் காலம் அரசாங்கத்தாலும் வங்கியாலும் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்படவுள்ள கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு விண்ணப்பகாரர் அமைவாக நடந்துகொள்ள வேண்டியது. வங்கியின் நாளாந்த வேலைகளில் நிதி ஒழுங்கு விதிகள் ஏதாவது பொருத்தமற்றவை எனக் கருதப்பட்டவிடத்து அவை பற்றிய பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

6. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிட்ட சாதனங்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமயகீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய ஒழுங்குவிதித் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிகக்கூடிய கல்விச் சான்றிதழும் தொழிற்றகைமைச் சான்றிதழ்களும்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று தலைமை ஆசிரியரின் அல்லது பள்ளிக்கூட அதிபரிடம் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

7. அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரரின் விண்ணப்பங்கள் யாவும் அவரவர் திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். திணைக்களத் தலைவர்களுக்கூடாகக் குறிப்பிட்ட திகதிக்குப் பின் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டவிடத்து அவரவர் திணைக்களத் தலைவர்களால் குறிப்பிட்ட திகதிக்கு முன் பெறப்பட்டது என்று அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட தலைவர் தகுந்த காரணம் காட்டி சிபாரிசு செய்தவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. அரசாங்க உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அவர் தெரிவு செய்யப்பட்டவிடத்து வேலை ஒப்புக்கொள்ள அவரை விடமுடியும் என்று ஏற்றுக்கொண்டவிடத்தே தான் கவனிக்கப்படும்.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சார்பான சாதனங்கள் யாவும் இலங்கை சேமிப்பு வங்கி முகாமையாளருக்கு மட்டுமேயன்றி வேறெந்த வங்கி உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைத்தல் கூடாது. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்படும்.

10. எவ்விதத்திலான ஆதரவு நாடலும் விண்ணப்பகாரரை தகைமையற்றவராக்கிவிடும்.

ரி. ஜே. காரியவாசன்,
முகாமையாளர்,
இலங்கை சேமிப்பு வங்கி-

எச்செலன் சதுக்கம்,
கொழும்பு 1.
1970 ம் ஆண்டு ஒற்ரோபர் மீ 25 ந உ.

### விண்ணப்பப் படிவம்

### எழுதுநர் பதவி, பொது எழுதுநர் வகுப்பு

1. முழுப் பெயர் :———.
2. சொந்த முகவரி :———.
3. விண்ணப்பகாரர் பாரம்பரியத்தால் அல்லது பதிவினால் இலங்கைப் பிரசையா? :———.
4. விண்ணப்பகாரரின் பிறந்த இடமும் திகதியும் :———.
   (பிறப்புச் சாட்சிச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
5. விண்ணப்பகாரரின் தந்தையின் பிறப்பிடம் :———.
6. சித்தி எய்திய மிகக்கூடிய கல்வித் தகைமை :———.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்)
7. முன் அனுபவ விபரங்கள் :———.
8. இன்றைய உத்தியோக விபரங்கள் :———.
9. விண்ணப்பகாரரின் குணவியல்பு சார்பாய் சான்று பகருபவர்களின் பெயரும், முகவரியும் ;—
   (நற்சான்றுப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

   1 :———.
   2 :———.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :———.

11–112—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் பதவி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன.

1. **தகைமைகள்.**—(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் அல்லது தகவுத்தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் பத்திரிகைத் துறை அல்லது பொதுசனத் தொடர்பு வேலைகளில் குறைந்தது மூன்று வருட அனுபவமாகுதல் பெற்றிருத்தல் வேண்டும்,

அல்லது

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் அல்லது சமமான பத்திரம் பெற்றிருப்பதுடன் பத்திரிகைத்துறை அல்லது பொதுசனத் தொடர்பு வேலைகளில் குறைந்தது 10 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்

(ஆ) சிங்கள ஆங்கில மொழிகளில் நல்ல அறிவு இருத்தல் அத்தியாவசியமானது.

2. **வயது.**—30 க்கும் 45 க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

3. **வேதனக் கிரமம்.**—ரூபா 525—825 (5 × 20—8 × 25) ரூபா 625 பெறுமுன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு.

இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, மா-அதிபர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு 1970 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்குப் பிந்தாமல் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உறையின் இடதுகோடி மூலையில், "பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சுசில் முனசிங்ஹ,
மா-அதிபர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 28 ந் வ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் பதவி**

1. முழுப் பெயர் : ————.
(அ) பெயர் முதலெழுத்துக்களுடன் : ————.
(திரு., திருமதி, செல்வி எது என குறிப்பிடவும்)
2. வீட்டு முகவரி : ————.
3. பிறந்த தினம் : ————.
1970 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 20 ஆம் திகதி வயது :—
வருடங்கள் :————. மாதங்கள் :————. தினங்கள் :————.
(பிறப்பு சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. தேசிய இனம் : ————.
5. கல்வியும் பயிற்சியும் : ——.

| பயின்ற பாடசாலைகள் அல்லது நிறுவனங்கள் | திகதி முதல்-வரை | சித்தியடைந்த பரீட்சைகள் | முயற்சிகளும் வகித்த பொறுப்புள்ள பதவிகளும் |
|---|---|---|---|
| | | | |

6. சித்தியடைந்த உயர் பரீட்சை : —
சிங்களம் : ————.
தமிழ் : ————.
ஆங்கிலம் : ————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
7. அனுபவம் : ————.
(முன்னைய அனுபவம் பற்றிய விபரங்களும், ஊழிய விபரங்களும் படிமக் கிரமமாகக் காட்டப்படல் வேண்டும்)
8. உங்கள் உறவினர்கள் அல்லாத ஆனால் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில உங்களுடன் பரிச்சயமுள்ள அந்தஸ்துடைய மூன்று சார்பாளர்களின் பெயர்களும் முகவரிகளும் .--
1. ————. 2. ————. 3. ————.
9. சான்றிதழ்கள் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ள பிரமுகர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :—
1. ————. 2. ————. 3. ————.
10. வேறு ஏதும் விபரங்கள் : ————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என்று இத்தால நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு காணப்படும் விபரங்கள் தவறாக அல்லது பிழையாக இருககக் காணப்படுமாயின் தேர்வுக்கு முன்னர் அல்லது தேர்வின் போது தகைமை இழக்கவும், நியமனத்தின் பின்னர் இது கண்டு பிடிக்கப்படுமாயின் நஷ்டஈடு இல்லாது பதவி நீககம் செய்யப்படவும் நான் உட்படுவேன் என்பதை நான் அறிந்துள்ளேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11-129—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### அஞ்சல் தந்தித் திணைக்களம்

**இறப்பர் முத்திரை அச்சுகள் வழங்குதல்**

கொழும்பு 1, அஞ்சல் தந்தித் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாவட்ட கேள்விப்பத்திர சபைத் தலைவரால் இறப்பர் முத்திரை அச்சுகள் வழங்குதலுக்கான கேள்விப்பத்திரங்கள் 19.11.70 ந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 19.11.1970 ந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப் பத்திரதாரர் விரும்பினால் சமூகம் அளிக்கலாம்.

3. கொழும்பு 5, நாராயன்பிட்டியிலுள்ள உபகரண, கட்டட, நலன் புரி, களஞ்சிய உதவி அத்தியட்சரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட படிவங்களிலே கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு, பி. அ. அலுவலகத்திலுள்ள வந்துபெறும் அஞ்சல் வைப்புக் கரும பீடத்தில் (இல. 4) வைப்புப்பணமாக ரூபா 50/- கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரதாரருக்கே கேள்விப் பத்திரப்படிவங்கள் 5.11.1970 ல் இருந்து 18.11.1970 பி. ப. 4.30 மணிவரை வழங்கப்படும்.

5. கொழும்பு 5, நாராயன்பிட்டியிலுள்ள உபகரண, கட்டட, நலன்புரி, களஞ்சிய உதவி அத்தியட்சரின் அலுவலகத்தில் மேலதிக விபரஙகள் பெற்றுக்கொள்ளலாம்.

எம். பி. டீ சில்வா,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம்,
(அஞ்சல் சேவைகள்).

அஞ்சல் பிரிவு,
அ. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

11-47—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,931

### உணவுப் பகுதி

**பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் சேலைப்பைகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்**

சாமேஸ் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 25,958 சணற் சாக்குகளும் சேலைப்பைகளும் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 11.11.1970 புதன்கிழமை பி.ப.2.30 மணி வரை, 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 300 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நடராசா,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 30 ந் வ.

11-141—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கொழும்பு உப பிரிவு

கீழே சொல்லப்பட்டவேலைக்குக் கேள்விப் பத்திரம் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற் பிரிவுப் பெரும்பாகப் பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கு நேராக உள்ள தொகைக்கோ அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக் காரரின் பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| களினி வடக்கு அணைக்கு வேண்டிய திருத்தங்கள் | | |
| 0 மைல்—0 எம்—3,500′ .. .. | 1,00,000 .. | 100 |

3. இக் கேள்விக்கான வெற்றுப் பத்திரம் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ந் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விக் காரர்களாக முன்வருவோரைக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதியுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஓர் பத்திர மூலம் கேள்விக்காரர்களாக வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் கட்ட வேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப் பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். ஜி. ஆர். டி. சில்வா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உப பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 25 ந வ.

11–90—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## நிர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உப பிரிவு

1970–71 நிதி ஆண்டிற்கு கண்டி உப பிரிவு பண்டக சாலைக்கும்; பண்டக சாலையிலிருந்தும் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்காகிய கேள்விப் பத்திரங்கள் கண்டியிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 26.11.70 திகதி காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்; அதன்பின் உடனே திறந்து பார்க்கப்படும்.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூ 20,000 க்கும் அதற்கும் மேலும் பதிவு ஒப்பந்தக்காரர்கள் மாத்திரம் கேள்விப் பத்திரங்கள் சமர்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கண்டி, மாத்தளை, கசலக்க, நுவரேலியா ஆகிய இடங்களிலுள்ள உபபிரிவு நீர்ப்பாசன அலுவலகங்களில், அலுவலக நேரங்களில் 7.11.70 தொடக்கம் 24.11.70 வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன் வருவோர் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி கேள்விப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை எவ் ஒப்பந்தக் காரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் பெற தகுதியுடையவரா என்பதை நிர்ணயிக்க நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு உதவியாக இருக்கும். கேள்விப் பத்திரங்கள் பெற முன்வருவோர் நீர்ப்பாசன காரியாலயங்களிலோ அல்லது கச்சேரியிலோ ரூ 25/- கட்டுப்பணம் செலுத்தியதற்குரிய பற்றுச் சீட்டு காண்பிக்க வேண்டும். குறைந்தது இரண்டு லொறியாகுதல் தனதுடைமையாக உள்ளவர்களுக்கே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும். ஒப்பந்தக்காரர்கள் லொறிகள் யாவும் தனதுடைமை என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்கு அதற்குரிய பதிவுப் பத்திரத்தை நீர்ப்பாசன பொறியியலாளர்க்கு காண்பிக்க வேண்டும்

4. இக் கேள்விப் பத்திரங்களுக்குரிய மேலதிக விஷயங்களை கண்டி நீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எ. ரி. ஜெ. த பின்டோ,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கண்டி உப பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
கண்டி உப பிரிவு,
குண்டசாலை,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 13 ந வ.

11–125—5.11.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### பாவித்த கோணிப்பைகளுக்கான கூறுவிலைகள்

மாதம் ஒன்றிற்கு 1000 பாவித்த கோணிப் பைகளை வழங்குவதற்கு கூறு விலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகளுடன் கோணிப்பைகளின் மாதிரிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கூறு விலைகளை பொது முகாமையாளருக்கு என விலாசமிட்டு இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாசத்தில் 16.11.1970 அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக இக் காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு–2,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 25 ந வ.

11–59—5.11.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1971 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் திசெம்பர் மாதம் 31 ந் திகதி 1971 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், அநுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தைக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தறினல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், அநுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம், அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ளச ாப்பாட்டு " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலைக்கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம்கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதத்தின் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்குத் தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

13. (i) கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 4½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்பொழுதுள்ள 12 அவுன்ஸ் அரிசி அளவிலிருந்து 9 அவுன்ஸ் அரிசி அளவாகத் திருத்தப்பட்டிருக்கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் 1971 ம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து தேவைப்படமாட்டாது.

(iii) ஒரு இரு. 50 வீதம் இப்போதுள்ள விலையில் குறைக்கப்படாத வீதத்தில் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியினல் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்குப் பணம் கொடுத்தல் வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப்பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர்கள் பணம் செலுத்துதல் வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் விலை குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iv) வேலையாட்கள் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தக்காரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்றுபோன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினல் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

அநுராதபுரம்,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 25 ந் வ.

எச். சீ. ஊருகொட,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

குறித்த அட்டவணை

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள்: மீன் | மாட்டு இறைச்சி | கருவாடு | காய் கறி | நோயாளிகள்: மீன் | மாட்டு இறைச்சி | கருவாடு | காய் கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலேயப்பற்றுவா, பி. வி. | 100 | 300 | 26.11.70 காலை 10 மணி | 150 | — | 300 | 600 | 75 | — | 150 | 300 |
| எப்பாவலே, பி. வி. | 100 | 400 | | 200 | — | 400 | 800 | 800 | — | 1,600 | 3,200 |
| கலன்பிந்துனுவேவ, பி. வி. | 100 | 400 | | 100 | — | 200 | 400 | 450 | — | 900 | 1,800 |
| கபறணே, பி. வி. | 100 | 400 | | 150 | — | 300 | 600 | 250 | — | 500 | 1,000 |
| கெபிற்றிகொலாவ, பி. வி. | 100 | 400 | | 100 | — | 200 | 400 | 150 | — | 300 | 600 |
| மரதன்கடவலே, பி. வி. | 100 | 400 | | 200 | — | 400 | 800 | 350 | — | 700 | 1,400 |
| மகாவிலாச்சிய, பி. வி. | 100 | 300 | | 100 | — | 200 | 400 | 100 | — | 200 | 400 |
| மொறவேவா, பி. வி. | 100 | 300 | | 75 | — | 150 | 300 | 50 | — | 100 | 200 |
| நாகம்பகா, பி. வி. | 100 | 400 | | 150 | — | 300 | 600 | 250 | — | 500 | 1,000 |
| புல்மோட்டை, பி. வி. | 100 | 300 | | 300 | — | 150 | 500 | 300 | — | 150 | 500 |
| றணறவேவா, பி. வி. | 100 | 300 | | 150 | — | 300 | 600 | 175 | — | 350 | 700 |
| இரத்மலகாவேவ, பி. வி. | 100 | 400 | | 200 | — | 400 | 800 | 200 | — | 400 | 800 |
| இராசாங்கனே, பி. வி. | 100 | 300 | | 100 | — | 200 | 300 | 25 | — | 50 | 100 |
| தலாவை, பி. வி. | 100 | 400 | | 200 | — | 400 | 800 | 900 | — | 1,800 | 3,600 |
| தமுத்தேகம, பி. வி. | 100 | 300 | | 150 | — | 300 | 600 | 150 | — | 300 | 600 |
| *சேனபுர, பி. வி. | 100 | 600 | | 200 | — | 400 | 800 | 600 | — | 1,200 | 2,400 |

*1.1.71 தொடக்கம் 30.9.71 வரை.

11–93—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனம்

### அறிவித்தல்

துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனத்திலுள்ள உண்டிச்சாலைக்குத் தேவையான சம்பா அரிசி (உள்ளூர்) விநியோகிப்பதற்கான முத்திரையிடப் பட்ட கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரங் களும், விபரங்களும் துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபன தலைமை நிதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 14.11.70 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னதாகக் கிடைத்தல் வேண்டும்.

தலைமை நிதி முகாமையாளர்.

11-115—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவைத் திணைக்களம்

1970.11.15 ம் திகதி பி. ப. 4.30 மணிவரையும், கொழும்பு, சதம் வீதி, 1031/1, டி மெல் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவைத் திணைக்களத்தின் ஆணையாளரால் கீழே குறிக்கப்பட்டிருக்கும் வேலைக்குக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| இடம் | தொழிலின் விபரம் |
|---|---|
| 1. குழந்தை இல்லம், பாணந்துறை.. | கூரை திருத்துதல் |

கேள்விப் பத்திரத்திற்கு வேண்டிய பதிவு

அரசாங்கத்துடன் அல்லது கூட்டுத்தாபனத்துடன் ரூபா 15,000 அல்லது அதற்கு மேலதிகமாக.

2. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இந்தக் காரியாலயத்திலோ சரி அல்லது வேறு எந்த கச்சேரியிலோ சரி ஒவ்வொரு வேலைக்கும் கட்டுப்பணமாக 100 ரூபா கட்டி, அதன் பற்றுச்சீட்டை காண்பித்தால், கேள்விப் பத்திரங்கள் 1970 11.15 திகதி பிற்பகல் 2.30 மணிவரையும் கொடுக்கப்படும். மேலே குறிக்கப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மாத்திரம் பணம் கட்டும் பத்திரம் கொடுக்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பத்திரங்கள் இவ்வேலை சம்பந்தமாக அனுப்பலாம். கேள்விப் பத்திரத்திறகாக கட்டுப்பணம் தேவையில்லை. குறிக்கப்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டதாக அத்தாட்சி காண்பித்தால் மாத்திரமே கேள்விப் பத்திரம் கொடுக்கப்படும்.

4. இந்தக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் பத்திரத்தில் இரு பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்த தபாலில், கொழும்பு, சதம் வீதி, 1031/1, டி மெல் கட்டிடம், நன்னடத்தைப் பாதுகாவல் நலன் கவனிப்பு சேவை ஆணையாளருக்கு அனுப்புதல் சரி அல்லது நேர் முகமாக இந்தக் காரியாலயத்தில் கொடுக்கப்படலாம். காகிதத்தின் உறையில் இடது பக்கமூலையில் எந்த இடத்திற்கென்றும், எவ்வேலைக் கென்றும் தெளிவான எழுத்தில் காட்டப்படல் வேண்டும்.

5. 1970.11.16 திகதி முற்பகல் 10 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரம் கேள்விப்பத்திரக்காரர் பிரசன்னமாகலாம்.

6. வேறு விபரங்கள் தேவைப்படின் இக்காரியாலயத்தின் தொழில் கிளையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

எம். வி. டி. சந்திரரத்தின,
நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன்
கவனிப்பு சேவை ஆணையாளருக்காக.

நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு
சேவைத் திணைக்களம்,
1031/1, டி மெல் கட்டிடம்,
சதம் வீதி, கொழும்பு,

11–1—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்
1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

## இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. பொயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. பொயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலே கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் றெக்ராறல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 33 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லேக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 | 00 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. .. | 0 | 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 24 12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.